Name of the Newspaper: T- Hindu Date: 20/7/17

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தில் மேலும் ஒரு வழித்தடம்

# வடபழனி, போரூர் வழியாக பூந்தமல்லி வரை நீட்டிப்பு

● கோவையிலும் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படும்

■ சென்னை

கலங்கரை விளக்கம் முதல் கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் வரை உத்தேசிக்கப்பட்டுள்ள மெட்ரோ ரயில் 4-வது வழித்தடம் வடபழனி, போரூர் வழியாக பூந்தமல்லி வரை நீட்டிக்கப்படும் என முதல்வர் கே.பழனிசாமி அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் நேற்று விதி 110-ன் கீழ் முதல்வர் வெளியிட்ட அறிவிப்புகள் வருமாறு:

மெட்ரோ ரயில் திட்டத்தின் 2-வது கட்டமாக 45.77 கி.மீ. நீளத்துக்கு மாதவரம் முதல் சிறுசேரி வரையிலும், 17.12 கி.மீ. நீளத்துக்கு சென்னை கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் முதல் கலங்கரை விளக்கம் வரையிலும், 44.66 கி.மீ. நீளத்துக்கு மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும் மொத்தம் 107.55 கி.மீ. நீளத்துக்கு 3 மெட்ரோ ரயில் வழித்தடங்களை ரூ.85,047 கோடி உத்தேச மதிப்பில் செயல்படுத்த தமிழக அரசு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தத் திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்காகவும், நிதி உதவிக்காகவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விருகம்பாக்கம், வளசரவாக்கம் ஆகிய பகுதிகளில் ஆற்காடு சாலையில் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலை கருத்தில்கொண்டு, கலங்கரை விளக்கத்தில் இருந்து கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் வரை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 4-வது வழித்தடத்தை வடபழனி, போரூர் வழியாக பூந்தமல்லி வரை நீட்டிப்பு செய்ய அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் மேற்கொள்ளும். இத்திட்டத்தை செயல்படுத்துவதால் சுமார் ரூ.3,850 கோடி கூடுதல் செலவாகும்.

## கோவையிலும் மெட்ரோ ரயில்

கோவை மாநகரில் பெருகி வரும் போக்குவரத்து நெரிசலை கருத்தில்கொண்டு அங்கு மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கான விரிவான சாத்தியக்கூறு, திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் மேற்கொள்ளும். இத்திட்டத்துக்கு மத்திய அரசின் மூலம் ஜெர்மன் நிதி நிறுவனமான கே.எப்.டபிள்யூ.விடம் நிதியுதவி பெறப்படும்.

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின்கீழ் தமிழகத்தில் உள்ள மலை, வனப் பகுதிகளில் வாழும் மிகவும் பின்தங்கிய மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த ஒரு திட்டம் வகுக்கப்படும். அடிப்படை வசதிகளை அளிப்பதில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல், குறைந்த மக்கள்தொகை கொண்ட குக்கிராமங்களை இணைக்க சாலை, போக்குவரத்து வசதி செய்தல், மண் அரித்தலை தடுத்தல், நீர்வளம், வேளாண் சார்ந்த தொழில்களை மேம்படுத்துதல், சுற்றுச்சூழல் கல்வி, பல்லுயிர் பாதுகாப்பு, அழிக்கப்பட்ட, வளம் குன்றிய வனப் பகுதிகளை பசுமையாக்குதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும். மாநில திட்டக் குழுவால் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

வனத்துறை மூலம் வேட்டைத் தடுப்பு முகாம்கள் செயல்படுத்தப்படுவதால் வேட்டையாடுதல், திட்டமிட்ட கடத்தல் போன்றவை கணிசமான அளவில் தடுக்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட கடினமான பணியில் ஈடுபட்டுள்ள 908 வேட்டைத் தடுப்புக் காவலர்களுக்கு மாதாந்திரத் தொகுப்பு ஊதியம் ரூ.6,750-ல் இருந்து ரூ.10 ஆயிரமாக அதிகரிக்கப்படும்.

வாடகை கட்டிடங்களில் இயங்கி வரும் 11 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு நடப்பு ஆண்டில் ரூ.13 கோடியே 87 லட்சத்தில் சொந்தக் கட்டிடங்கள் கட்டப்படும்.

இவ்வாறு முதல்வர் பழனிசாமி அறிவித்தார்.